# <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்</u>

## <u>மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகள் 2005</u>

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

Notification No.TNERC/ISOA/11/1, dated 24th June 2005

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின்படி (மைய சட்டம் 2003ல் 36) தமிழ்நாடு மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமைக்கு (open access) வரையறைகளையும் நிபந்தனைகளையும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் குறிப்பிடல் வேண்டும் என்றிருப்பதாலும் மற்றும் திறந்த நுழைவுரிமைக்கான வரையறைகளையும் நிபந்தனைகளையும் வகை செய்கிற இந்த ஒழுங்குமுறை விதிகள் முன்வெளியிடுகைக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும் என்றிருப்பதாலும் மற்றும் அவ்வண்ணமே முன்வெளியிடுகையை செய்யப்பட்டுவிட்டபடியாலும், தற்போது, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 181 வது பிரிவின்படியும் மற்றும் அதன்பொருட்டு இயல்விக்கும் மற்றைய எல்லா வகையான அதிகாரங்களின்படியும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கீழ்க் கண்டவாறு ஒழுங்குமுறை விதிகளை உருவாக்குகிறது, அதாவது :–

1. <u>குறுந்தலைப்பும் தொடக்கமும் :</u>

(i) இந்த ஒழுங்குமுறை விதிகள் ‘‘2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்– மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகள் என அழைக்கப்படலாம்.

(ii) இந்த ஒழுங்குமுறைவிதிகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. <u>பொருள் வரையறைகள்</u>

இந்த ஒழுங்குமுறை விதிகளில், சூழ்நிலை வேறுபொருள் குறித்தாலன்றி–

(a) ‘‘சட்டம்’’ என்பது 2003 ஆம் ஆண்டு மின்சார சட்டம் ( 2003ல் 36) என்று பொருள்படும் ;

(b) ‘‘மின்செலுத்துகை திறன் அளவு ஒதுக்கீடு’’ (Allotted Transmission capacity) என்பது இந்த மாநிலத்திற்குள் மின் செலுத்துகை திட்டத்தின் கீழ் ஒரு நீண்டகால வாடிக்கையாளருக்கு குறிப்பிடப்பட்ட மின் உட்செலுத்துகை பகுதிக்கும் (Specific points of injection) குறிப்பிடப்பட்ட மின் எடுப்பு பகுதி (Specific points of drawal) ஆகியவற்றிக்கிடையேயான அனுமதிக்கப்படுகிற மெகாவாட் மின்சக்தி வழங்குகை என்று பொருள்படும் மற்றும் இந்த மின் செலுத்துகை திறன் அளவு ஒதுக்கீடு என்ற சொற்றொடர் அவ்வண்ணமே பொருள்கொள்ள வேண்டும்.

(c) ‘‘ஆணையம்’’ என்பது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்று பொருள்படும் ;

(d) இந்த ஒழுங்குமுறை விதியில் ‘‘நுகர்வோர்’’ என்ற சொல் இந்தச் சட்டத்தின்கீழ் அதற்குள்ள அதே பொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் இந்த

ஒழுங்குமுறை விதிகள் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள எந்த நுகர்வோர்களுக்கு பொருந்துமோ அந்த நுகர்வோர்களுக்கு மட்டுமே பொருந்தி பொருள்படுதல் வேண்டும்.

(e) ''நேரடி வாடிக்கையாளர்'' என்பது இந்த மாநிலத்தில் மாநில மின்செலுத்துகை நிலையம்/மின்செலுத்துகை உரிமம்தாரர் மற்றும்/ அல்லது மின்பகிர்மான உரிமம்தாரர் ஆகியோரின் சொந்தமான அல்லது இயக்கத்தின்கீழ் உள்ள திட்ட அமைப்புக்கு நேரடியாக இணைக்கப்பட்டுள்ள நபர் எனப்பொருள்படும்.

(f) ''பதிக்கப்பட்ட வாடிக்கையாளர்'' (Embedded Customer) என்பது ஒரு நேரடி வாடிக்கையாளர் அல்லாத ஒரு நபர் எனப்பொருள்படும் ;

(g) ''மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு'' என்பது இந்த ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட தமிழ்நாடு மின் கட்டமைப்பு விதித் தொகுப்பு எனப்பொருள்படும் மற்றும் இந்த ஒழுங்குமுறை விதியை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட நாளில் பொருந்துகிற இந்திய மின்கட்டமைப்பு விதித்தொகுப்பினையும் அது உள்ளடக்கும் ;

(h) 'ஒருங்கிணைப்பு முகவர் மையம்' (Nodal Agency) என்பது இந்த ஒழுங்குமுறை விதிகளின் 10 வது ஒழுங்குமுறை விதியின்கீழ் பொருள்வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைப்பு முகவர் மையம் (Nodal Agency) எனப் பொருள்படும் ;

(i) ''திறந்த நுழைவுரிமை'' (open access) என்பது இந்த ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்கியவாறு மின் செலுத்துகை கம்பிகள் அல்லது மின்பகிர்வு திட்டம் அல்லது அத்தகைய கம்பிகள் அல்லது திட்டத்துடன் இணைந்து உள்ள வசதிகள் ஆகியவற்றை உரிமம்தாரர் அல்லது நுகர்வோர் அல்லது மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நபர் எவரும் பயன்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட பாரபட்சமற்ற வகைமுறை என்று பொருள்படும் ;

(j) ‘‘திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்’’ என்பது மின்வழங்குகைப் பகுதியைச்சார்ந்த மின்பகிர்மான உரிமம்தாரர் அல்லது வேறு ஒரு நபரிடமிருந்து மின் வழங்குகை பெறுவதற்கு மாநில ஆணையத்தால் அனுமதிக்கப்பட்ட ஒரு வாடிக்கையாளர் அல்லது திறந்த நுழைவுரிமையைப் பயன்படுத்தியுள்ள அல்லது அதனைப் பயன்படுத்த விரும்பும் (தனது சொந்த பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகிற மின் உற்பத்தி கருவி) உள்ளடங்கலான ஒரு மின் உற்பத்தி கம்பெனி என்று பொருள்படும்;

(k) ‘‘ஒதுக்கப்பட்ட மின் செலுத்துகை திறன் அளவு’’ என்பது மின்செலுத்துகை திறன் அளவினைச் சார்ந்துள்ள மின்செலுத்துகை திட்டத்தை மெகாவாட் திறன் அளவில் குறிப்பிடப்பட்ட மின் செலுத்துகைப்பகுதி(கள்) மற்றும் குறிப்பிடப்பட்ட மின் எடுப்பு பகுதி(கள்) ஆகியவற்றிற்கிடையே அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு குறுகிய கால வாடிக்கையாளருக்கு மின்சக்தி வழங்குகை என்று பொருள்படும்;

(l) ‘‘மா.மி.சு.ப.மை.’’ (SLDC) என்பது இந்தச் சட்டத்தின் 31வது பிரிவின் (1) வது துணைப்பிரிவின்படி இந்த உரிமம்தாரரின் ஒருங்கிணைந்த யூனிட்டாக தற்போது இருந்துவரும் வடிவத்தில் அமைக்கப்படுகிறவரை, இந்த மாநில மின் சுமை பகுப்பு மையம் என்று பொருள்படும்;

(m) ‘‘மா.மி.ப.நி’’ (STU) (மாநில மின் செலுத்தப் பயன் நிறுவனம்) என்பது அங்ஙனமே மாநில அரசினால் குறிப்பிடப்படுகிற இந்த வாரியம் அல்லது இந்த அரசு கம்பெனி என்று பொருள்படும். இது தற்போது தமிழ்நாடு மின்சார வாரியமாக இருக்கிறது;

(n) ‘‘மின்செலுத்துகைத் திட்டப்பிரிவு’’ என்பது மின் உட் செலுத்துகைப் பகுதியிலிருந்து மின் எடுப்புப் பகுதிவரையிலுள்ள முழுமையான அல்லது ஒரு பகுதியாக இயங்கும் மின் செலுத்துகைத் திட்டம் என்று பொருள்படும்’

(o) “மின் சுமந்து செல்லுதல் (wheeling)” என்பது 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 62 வது பிரிவின் படி தீர்மானிக்கப்படுகிற கட்டணங்களைச் செலுத்துகையின் பேரில், மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்காக இந்த மின்பகிர்மான திட்டம் மற்றும் ஒரு மின்செலுத்துகை உரிமம்தாரர் அல்லது நிலவரத்திற்கேற்ப ஒரு மின்பகிர்மான உரிமம்தாரரிடம் இணைந்துள்ள வசதிகளை மற்றொரு நபரால் பயன்படுத்தப்படுகிற ஒரு செயற்பாடு என்று பொருள்படும்;

இந்த ஒழுங்குமுறைவிதிகளில் பயன்படுத்தப்பட்டும் மற்றும் பொருள் வரையறுக்கப்படாதவாறும் ஆனால் இந்தச் சட்டத்திலோ அல்லது இந்த மின்கட்டமைப்பு விதித்தொகுப்பிலோ பொருள் வரையறுக்கப்பட்டுள்ள சொற்களும் மற்றும் சொற்றொடர்களும் அவற்றிற்கு இந்தச் சட்டத்திலோ அல்லது நிலவரத்திற்கேற்ப இந்த மின்கட்டமைப்பு விதித்தொகுப்பிலோ கொடுக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. <u>இயங்குகையின் அளவு (Extent of application)</u>

இந்த ஒழுங்குமுறை விதிகள் இந்த மாநிலத்தில், மாநிலத்திற்குள் உரிமம்தாரர்களின் மின் செலுத்துகை திட்டம் மற்றும் / அல்லது மின்பகிர்மான திட்டம், ஆகியவற்றை அத்திட்டம் மாநிலங்களுக்கிடையேயான மின்செலுத்துகை திட்டத்துடன் ஒருங்கிணைத்து பயன்படுத்துவது உள்ளடங்கியவாறு பயன்படுத்துவதற்காக திறந்த நுழைவுரிமை மீது இயங்குதல் வேண்டும்.

4. <u>திறந்த நுழைவுரிமைக்கான தகுதிப்பாடும் மற்றும் அதற்கான நிபந்தனைகளை திருப்திபடுத்துதலும்</u>

(1) இந்த ஒழுங்குமுறைவிதிகளுக்குட்பட்டு, இந்த ஆணையத்தினால் தீர்மானிக்கலாகும் மின் செலுத்துகை மற்றும் மற்றைய கட்டணங்களை செலுத்துவதின்பேரில், இந்த உரிமம்தாரர்கள் ஒரு சொந்த உபயோகத்திற்கான மின் உற்பத்தி கருவிகள் ஆகியவை அமைத்துக் கொண்ட நபர்கள் உள்ளடங்கலான மின் உற்பத்தி கம்பெனிகள் மற்றும் மின்சார விற்பனையாளர்கள் ஆகியோர் மாநில மின் செலுத்துகை பயனகத்தின் அல்லது மின் செலுத்துகை உரிமம்தாரர் எவரின் மாநிலத்திற்குள் மின் செலுத்துகை திட்டத்திற்கு திறந்த நுழைவுரிமை தகுதிப்பாடு உடையவராக இருத்தல் வேண்டும்.

(2) இந்த ஒழுங்குமுறை விதிகளுக்குட்பட்டு, இந்த ஆணையத்தினால் தீர்மானிக்கலாகும் மின்சாரம் சுமந்து செல்லுதலுக்கான (wheeling) கட்டணங்களைச் செலுத்துவதன் பேரில், இந்த உரிமம்தாரர்கள், ஒரு சொந்த உபயோகத்திற்கான மின் உற்பத்தி சாதனம் அமைத்துக் கொண்ட நபர்கள் உள்ளடங்கலான மின் உற்பத்தி கம்பெனிகள் மற்றும் நுகர்வோர்கள் ஒரு மின்பகிர்வு உரிமம்தாரரின் மின்பகிர்மான திட்டத்திற்கு திறந்த நுழைவுரிமை தகுதிப்பாடு உடையவராக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பம் செய்யும் காலத்தில் நொடித்துப்போனவர் அல்லது வங்கி கடன் நொடித்துப் போனவர் ஆக விளம்பப்பட்ட அல்லது மின்செலுத்துகை அல்லது மின்பகிர்மான உரிமம்தாரரின் இரண்டுமாத மின் கட்டண பில்லுக்கான நிலுவைகள் உடைய நபர் திறந்த நுழைவுரிமை தகுதிப்பாடு உடையவராக இருத்தல் கூடாது.

(4) எந்த நபரானவர் ஏற்கனவே திறந்த நுழைவுரிமை அனுமதி வழங்கப்பட்டு நொடித்துப்போனவர் (insolvent) அல்லது பொருளற்ற கடனாளி (bankrupt) இருக்கிறார் என்று விளம்பப்பட்டவராக அல்லது மின்செலுத்துகை அல்லது மின் பகிர்மான உரிமம்தாரராக இரண்டு மாத மின் கட்டணம் நிலுவையில் உள்ளவராக இருக்கிறாரோ அந்த நபர், நொடித்துப்போனவர்

அல்லது பொருளற்ற கடனாளி என்று தீர்மானிக்கப்பட்ட அல்லது இரண்டுமாத கட்டண நிலுவையினைக் கட்டத்தவறிய, தேதியிலிருந்து திறந்த நுழைவுரிமை தகுதிப்பாடு உடையவராக இருத்தல் கூடாது.

5. <u>மின்சக்தியின் மின்சாரம் சுமந்து செல்லுதலுக்கான நிகழ்விலுள்ள உடன்படிக்கைகள் / ஒப்பந்தங்கள் ஆகியவற்றிலுள்ள வகைமுறைகள்</u>

இந்த ஒழுங்குமுறை விதிகள் நடைமுறைக்கு வந்துள்ள தேதியில் ஒரு நிகழ்விலிலுள்ள உடன்படிக்கையின்படி / ஒப்பந்தத்தின்படி இந்த மாநிலத்தில் உள்ள (மாநிலத்திற்குள் மின்செலுத்துகை மற்றும்/ அல்லது மின்பகிர்மான திட்டத்திற்கு திறந்த நுழைவுரிமையினைப் பயன்படுத்திவரும் நபர்கள் அத்தகைய நிகழ்விலிலுள்ள உடன்படிக்கையில் /ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அதே வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி அத்தகைய நுழைவுரிமையைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்வதற்கு தகுதிப்பாடு உடையவராக இருத்தல் வேண்டும். அத்தகைய நபர்கள் அத்தகைய நிகழ்விலிலுள்ள உடன்பாடு / ஒப்பந்தம் முடிவுறும்போது இந்த ஒழுங்குமுறை விதிகளின்படி நீண்டகால மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு தகுதிப்பாடு உடையவராக இருத்தல் வேண்டும். மேலே சொல்லப்பட்ட அத்தகைய நபர்கள் அத்தகைய நிகழ்விலிலுள்ள உடன்பாடு / ஒப்பந்தம் முடிவுறும் காலத்திற்கு குறைந்தபட்சம் முப்பது நாட்களுக்கு முன்னரே இந்த நீண்டகால திறந்த நுழைவுரிமை வகைப்பாட்டின் கீழ் வருவதற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

6. <u>மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களின் வகைப்பாடு</u> ;–

மேலே உள்ள 5 வது ஒழுங்குமுறை விதிக்குட்பட்டு, இந்த திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள் கீழ்க்கண்ட வகைகளாக குறிப்பிடப்படுகிறார்கள்.

(i) **குறுகியகால மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள்**

ஓராண்டு அல்லது அதற்கு குறைந்த காலம் மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமையைப் பயன்படுத்திவரும் ஒரு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் குறுகிய கால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளராக இருத்தல் வேண்டும்.

**(ii) நீண்ட கால மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள்**

ஐந்தாண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலம் மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமைப் பயன்படுத்திவரும் ஒரு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் நீண்டகால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு–1**

ஐந்தாண்டுக்கு குறைவாகயிருந்து மற்றும் ஓராண்டு காலத்திற்கு மேற்பட்டுள்ள திறந்த நுழைவுரிமை விண்ணப்பங்கள் குறுகிய கால திறந்த நுழைவுரிமைக்கு மட்டுமே பரிசீலிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஓராண்டு காலத்திற்கு மேற்படாத ஒரு காலத்திற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

**குறிப்பு–2**

மரபுசாரா எரிசக்தி மூலமாக (non conventional energy sources) மின்சார உற்பத்தியாளர் நீண்டகால மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளராகக் கருதப்படுதல் வேண்டும். மற்றும் அவர் உற்பத்தி திறன் எவ்வாறாயினும் திறந்த நுழைவுரிமைக்கு தகுதிப்பாடு உடையவராக இருத்தல் வேண்டும்.

**7. ஒதுக்கீடு முன்னுரிமை:–**

திறந்த நுழைவுரிமைக்கான முன்னுரிமை கீழ்க்கண்ட அளவு கோல் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்—

(a) ஒரு மின்பகிர்வு உரிமம்தாரர் அவரது திறந்த நுழைவுரிமை கோரிக்கை நீண்ட காலத்திற்கோ அல்லது குறுகிய காலத்திற்கோ இருந்திருந்தபோதிலும், திறந்த நுழைவுரிமைத் திறன் அளவு ஒதுக்கீட்டில் அவர் மிகவும் அதிக அளவு முன்னுரிமை உடையவராக இருத்தல் வேண்டும்.

(b) மற்றைய நீண்ட கால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்கள் இந்த மின் பகிர்வு உரிமம்தாரருக்கு அடுத்தபடி முன்னுரிமை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(c) இந்த குறுகிய கால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர், இந்த நீண்டகால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளருக்கு அடுத்தபடியாக முன்னுரிமை உடையவராக இருத்தல் வேண்டும்.

(d) குறுகிய கால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளருக்கான ஒதுக்கீடு முன்னுரிமையை திறன் அளவு போதுமைக்கு உட்பட்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(e) தற்போதுள்ள ஒரு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் உரியதொரு வகைப்பாட்டின்கீழ் புதிய திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளருக்கு மேலானதான முன்னுரிமையை உடையவராக இருத்தல் வேண்டும். ஆனால் அவர் நிகழ்விலிலுள்ள திறந்த நுழைவுரிமை காலம் முடிவதற்கு முப்பது நாட்களுக்கு முன்னரே அதனை புதுப்பிப்பதற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

(f) மேலேயுள்ள (a) விலிருந்து (e) வரை உள்ள பிரிவுகளுக்குட்பட்டு இந்த முடிவு முதலில் வருபவருக்கு முதலில் வழங்கப்படுதல் வேண்டும் என்ற அடிப்படையில் அடிக்கோலிட்டவாறு இருத்தல் வேண்டும்.

(g) திறன் அளவு போதுமை நிர்ப்பந்தங்கள் இருக்கும்போது, முதலாவது முதுநிலையாளர் அவரது தேவைப்பாட்டை கிடைக்கக்கூடிய திறன் அளவுக்கு கட்டுப்படுத்த இயலாது போனால், இந்த ஒதுக்கீடு அவருக்கு அடுத்த முதுநிலை விண்ணப்பதாரருக்கும் அதுபோன்றவாறு செய்யப்படலாம்.

8. <u>திறந்த நுழைவுரிமைக்கான கிடைக்கக்கூடிய திறன் அளவினைக் கணித்தல்</u>:—

**(1)** மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமைக்கான கிடைக்கத்தக்க திறன் அளவு ஒவ்வொரு மின் செலுத்துகை பிரிவுக்கும் மற்றும் ஒவ்வொரு துணை மின் நிலையத்திற்கும் இதனடியிற் கொடுக்கப்பட்ட கொள்கையினைப் பின்பற்றி மா.மி.செ.ப. (STU) வினால் கணிக்கப்படுதல் வேண்டும்.

(a) ஒரு பிரிவில்ஒரு மின் செலுத்துகை திட்டப்பிரிவின்படி திறந்த நுழைவுரிமையின் கிடைக்கத்தக்க அளவானது (Available open access capacity of a transmission system segment) = (DC-SD-AC) + NC.

DC என்பது (Designed capacity) இந்த மின் செலுத்துகை பிளவின் குறிப்பிடப்பட்டுள்ள திறன் அளவினை மெகாவாட்டில், SD என்பது மெகாவாட்டில் ஏற்கப்பட்ட கோரிக்கை (Sustained Demand) அந்தப் பிரிவில் மெகாவாட் அளவில் பதிவுச் செய்யும் போது – AC = ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட திறன் அளவு ஆனால் பயன்படுத்தப்படவில்லை (already Allocated Capacity) மற்றும் NC = மெகாவாட்டில் திறன் அளவு எதிர் பார்த்துச் சேர்க்கப்படுதல் வேண்டும் NC (capacity expected to be added).

(b) ஒரு துணை மின் நிலையத்தின் திறந்த நுழைவுரிமையில் கிடைக்கத்தக்க திறன் அளவு = TC – SP – AC, இதில் TC யானது இந்த துணை மின் நிலையத்தின் மின் மாற்றியின் (Transformer) MVA அளவில் உள்ள திறன் அளவு (TC), SP என்பது MVA அளவில் துணை மின் நிலையத்தின் உச்சக்கட்டம் மற்றும் AC என்பது ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட திறன் அளவு. ஆனால் MVA அளவில் பயன்படுத்தப்படவில்லை. மா.மி.செ.ப. (STU) மாதத்தின் முதல் நாளில் மாத அடிப்படையில் இந்த அளவுகளை துல்லியமான முறையில் கணக்கிடுதல் வேண்டும் மற்றும் அதனை இணையத்தளத்தில் (website) வெளியிடுதலும் வேண்டும்.

(2) உரியதொரு இந்த மின் பகிர்மான உரிமம்தாரர் எந்த மின்பகிர்மானத் திட்டத்தின் பகுதியில் திறந்த நுழைவுரிமைக் கோரிக்கை விடுக்கப்படுகிறதோ அந்த மின் பகிர்மான திட்டப்பகுதிக்கான கிடைக்கத்தக்க திறன் அளவினை தீர்மானித்தல் வேண்டும்.

**9. <u>திறந்த நுழைவுரிமைக்கான கட்டணங்கள்</u>**

கீழ்க்கண்ட கட்டணங்களை பொருந்துகிற அளவிற்கு இந்த திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரால் செலுத்தப்படவேண்டும்.

(1) <u>மின் செலுத்துகைக் கட்டணம் அல்லது மின்சாரம் சுமந்து செல்லுதல் (wheeling) கட்டணம்</u>

(a) ஒரு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரால் மாநில மின் செலுத்துகைப் பயனகம் / மின் செலுத்துகை உரிமம்தாரர் ஆகியோருக்கு செலுத்த வேண்டிய மின் செலுத்துகைக் கட்டணங்கள் மற்றும் மின் பகிர்மான உரிமம்தாரருக்கு செலுத்த வேண்டிய மின்சாரம் சுமந்து செல்லுதலுக்கான கட்டணங்கள் (wheeling charges) ஆகியவை இந்த ஆணையத்தால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். மின்சாரம் சுமந்து செல்லுதலுக்கான

கட்டணங்கள் மாநிலத்திற்குள் மின் செலுத்துகைக் கட்டணங்களுக்காக குறிப்பிடப்பட்டவாறாக அதே கொள்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(b) திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் சொந்த பயன்பாட்டிற்காக, திறந்த நுழைவுரிமைக்காக ஒரு தனிப்பணிக்காக ஒதுக்கப்பட்ட மின் செலுத்துகை திட்ட அமைப்பு அல்லது ஒரு மின்பகிர்மான திட்ட அமைப்பு அமைக்கப்படுகிறபோது, அத்தகைய தனிப்பணிக்காக ஒதுக்கப்பட்ட மின் செலுத்துகை அமைப்புக்காக மின் செலுத்துகை அல்லது மின் சுமந்து செல்லுதல் கட்டணங்கள் உரிமம்தாரராக கணிக்கப்பட்டு இந்த ஆணையத்தின் ஒப்புதலும் பெறப்பட்டு இருத்தல் வேண்டும். மற்றும் இந்த உபரி திறன் அளவு மற்றைய நபருக்கோ அல்லது நோக்கத்திற்கோ ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்பெற்ற காலம்வரை, அந்தக் கட்டணங்கள் முழுவதையும் அத்தகைய திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரால் ஏற்கப்படுதல்.

(c) மாநிலங்களுக்கிடையே மின் செலுத்துகை திட்டத்தோடு மாநிலத்திற்குள் மின் செலுத்துகைத் திட்டத்தையும் அல்லது மின்பகிர்மானத்திட்டத்தையும் சேர்த்து ஒரு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் பயன்படுத்தும் நிகழ்வில், மாநிலங்களுக்கிடையே மின் செலுத்துகைக்கான மின் செலுத்துகை கட்டணங்களுடன், மாநிலத்திற்குள் மின் செலுத்துகைத் திட்டத்தை பயன்படுத்துவதற்கான மின் செலுத்துகை கட்டணங்கள் மற்றும் மின் சுமந்து செல்லுதல் கட்டணங்கள் ஆகியவற்றையும் இந்த ஆணையத்தினால் தீர்மானிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டவாறு செலுத்தப்படுதல் வேண்டும்.

2. <u>மிகைக் கட்டணம்</u>

இந்த மாநிலத்தின் ஒரு மின் பகிர்வு உரிமம்தாரரின் ஒரு உதவித்தொகை செலுத்துகிற வாடிக்கையாளரால், அல்லது இந்த மாநிலத்தின் இந்த மின்பகிர்வு உரிமம்தாரரின் உதவித்தொகை செலுத்துகிற உயர் மின் அழுத்த வாடிக்கையாளருக்காக மின்சாரம்

வழங்குவதற்கு ஒரு நேரடி / பதிக்கப்பட்ட வாடிக்கையாளரால் திறந்த நுழைவுரிமை வசதியினைப் பயன்படுத்தினால் அத்தகைய வாடிக்கையாளர் மின் செலுத்துகை மற்றும் / அல்லது மின் சுமந்து செல்லுதல் கட்டணங்களுடன், கீழ்க்கண்ட முறையின்படி கணிக்கப்பட்ட ஒரு மிகைக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும்.

(a) இந்த மிகைக் கட்டணம், பொருத்தமான வாடிக்கையாளர்களின் வகைப்பாட்டிற்கு பொருந்துகிற மின் கட்டணத்தையும் மற்றும் பொருத்தமான இனத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்காக மின்பகிர்வு உரிமம்தாரரின் செலவுத்தொகை ஆகியவற்றையும் கருத்திற்கொண்டு இந்த ஆணையத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(b) இந்த மிகைக் கட்டணத்தொகையானது அந்த வகைப்பாட்டு வாடிக்கையாளர்களிடமிருந்து பெறுகிற நடைமுறை அளவிலுள்ள குறுக்கு உதவித்தொகைக்கு ஈடான வகையில் கணிக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது இந்த வாடிக்கையாளர் எந்த மின் வழங்கு பகுதியின் மின் பகிர்வு உரிமம்தாரரிடமிருந்து மின் வழங்குகையை பயன் படுத்தி வருகிறாரோ அந்த மின் பகிர்வு உரிமம்தாரருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(c) இந்த மிகைக் கட்டணம் குறுக்கு உதவித் தொகை (cross-subsidy) குறைத்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிலுள்ள சாலைப் படத்தில் அந்த குறுக்கு உதவித் தொகையை குறைத்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக இந்த ஆணையத்தால் குறிப்பிடலாகும் அதே முறையில் குறைக்கப்பட்டும் அகற்றப்பட்டும் இருக்கும்.

<u>குறிப்பு</u>

ஆனால் மின்சாரத்தை அவரது சொந்த பயன்பாட்டிற்கான இடத்திற்கு எடுத்துச் செல்வதற்காக ஒரு சொந்த பயன்பாட்டிற்கான மின் உற்பத்தி கருவியை அமைத்துக் கொள்கிற ஒரு நபருக்கு மின் செலுத்துகைக்கான அணுகுமுறை வழங்கப்படுகிற போது, அத்தகைய மின் கட்டணத்தை விதிக்கக் கூடாது.

(3) <u>கூடுதல் மிகைக் கட்டணம்</u>

(a) ஒரு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரோ அவரது மின் வழங்குகைப்பகுதியைச் சார்ந்த இந்த மின் பகிர்வு உரிமம்தாரர் அல்லாத வேறொரு நபரிமிருந்து மின்சார வழங்குகைப் பெறுகிறபோது, இந்த மின் பகிர்வு உரிமம்தாரருக்கு மின் சுமந்து செல்லுதல் கட்டணங்கள் மற்றும் மிகைக் கட்டணம் ஆகியவற்றோடு சேர்த்து இந்தச் சட்டத்தின் 42 வது பிரிவின் (4) வது துணைப்பிரிவின்படி வகைச் செய்யப்பட்டவாறான அவரது மின் வழங்குகைக்கடப்பாட்டிற்காக எழுகிற அந்த மின்பகிர்வு உரிமம்தாரரின் அறுதியிட்ட செலவுத் தொகையை சரிக்கட்டுவதற்காக இந்த மின் சுமந்து செல்லுதல் கட்டணங்களின் மீதான ஒரு கூடுதல் மிகைக் கட்டணத்தை இந்த மின்பகிர்வு உரிமம்தாரருக்கு ஒரு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் செலுத்த வேண்டும். இந்த கூடுதல் மிகைக் கட்டணமானது, மின் சக்தி வாங்குகைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறைகளின்படியான இந்த உரிமம்தாரரின் கடப்பாட்டில் இருந்திருந்து அது தொடர்ந்து நிற்குமானால் மட்டுமே இந்த கூடுதல் மிகைக் கட்டணம் பொருந்துமாறு இயங்குதல் வேண்டும்.

(b) எந்த மின் பகிர்வு உரிமம்தாரரின் வாடிக்கையாளர் திறந்த நுழைவுரிமையைப் பயன்படுத்த விரும்புகிறாரோ அந்த மின்பகிர்வு உரிமம்தாரர் விண்ணப்பம் பெற்றுக் கொண்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அந்த உரிமம்தாரர் மின்வழங்குகைக்கான அவரது கடப்பாட்டுக்காக செலவழிக்கிற அறுதியிட்ட

செலவுத்தொகை கணக்கிட்ட ஒரு விரிவான உரையை இந்த ஆணையத்திற்கு பணிந்தனுப்ப வேண்டும்.

(c) இந்த மின்பகிர்வு உரிமம்தாரரால் பணிந்தனுப்பப்பட்ட இந்த அறுதியிட்ட செலவுத்தொகை கணக்கு அறிக்கையினை இந்த ஆணையம் கூர்ந்தாய்வு செய்து திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரிடமிருந்து மறுப்புரை ஏதேனுமிருப்பின் அதனைப் பெற்று பின் இந்த கூடுதல் மிகைக் கட்டணத்தொகையை தீர்மானிக்க வேண்டும்.

(d) இந்த கூடுதல் மிகைக் கட்டணத்தை இந்த ஆணையம் தீர்மானிக்கலாகும் காலத்திற்கு விதிக்கப்படுதல் வேண்டும்.

<u>குறிப்பு</u>

ஆனால், மின்சாரத்தை அவரது சொந்தப் பயன்பாட்டிற்கான இடத்திற்கு எடுத்துச் செல்வதற்காக ஒரு சொந்தப் பயன்பாட்டிற்கான மின் உற்பத்தி கருவியை அமைத்துக் கொள்கிற ஒரு நபருக்கு மின் செலுத்துகைக்கான நுழைவுரிமை வழங்கப்படுகிறபோது, அத்தகைய கூடுதல் மின் கட்டணத்தை விதிக்கலாகாது.

**(4)** <u>பணித் திட்டமிடுதல் மற்றும் திட்டச் செயல்பாட்டுக் கட்டணங்கள்</u>

(a) மாநில சுமை அனுப்புகை மையத்திற்கு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரால் செலுத்த வேண்டிய இந்தப் பணி திட்டமிடுதல் மற்றும் திட்டச் செயற்பாட்டுக் கட்டணங்களை இந்தச் சட்டத்தின் **32** வது பிரிவின்படி இந்த ஆணையத்தினால் தீர்மானிக்கப்படுகிறவாறு இருத்தல் வேண்டும்.

(b) மேலே உள்ள **(1)** வது பிரிவின் படி இந்த மாநில சுமை அனுப்புகை மையத்தினால் வகுக்கப்படுகிற இந்தப் பணித்திட்டமிடுதல் மற்றும் திட்டச் செயற்பாட்டுக் கட்டணங்கள் இந்த

ஒழுங்குமுறை விதியின்படி இந்த ஆணையத்தினால் ஒப்பளிப்பு செய்யப்படுகிற மற்றைய கட்டணங்கள் மற்றும் மின் கட்டணங்கள் ஆகியவற்றோடு சேர்ந்து இருத்தல் வேண்டும்.

(c) இந்த ஒழுங்குமுறை விதிகளின்படி நுழைவுரிமையைப் பயன்படுத்தி வருகிற இந்த திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் ஒரு மின் உற்பத்திக் கம்பெனி அல்லது வணிக உரிமம்தாரராக இருந்தாலும்கூட, இந்தப் பணித்திட்டமிடுதல் மற்றும் திட்டச் செயற்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) <u>முன் திட்டமிடா பரிமாற்றத்திற்கான விலை நிர்ணயித்தல் (unscheduled interchange pricing</u>)

இந்த ஆணையம், அப்போதைக்கப்போது, சூழ்நிலையின் தேவைக்கேற்றவாறு ஒரு தனி ஆணையின் வாயிலாகவும் மற்றும் இந்தச் சட்டத்தின் 3 வது பிரிவின் படி பிறப்பிக்கப்பட்ட மின் கட்டண கொள்கைக்கு இணங்கியவாறும் இந்த மின் உற்பத்தியாளர்கள் ஆகியோரால் செலுத்தப்பட வேண்டிய முன் திட்டமிடா பரிமாற்றத்திற்கான கட்டணங்களைத் தீர்மானிக்க வேண்டும்.

ஆனால் திறந்த நுழைவுரிமைக்கான தேவைப்பாட்டின் அளவு மற்றும் மின் சக்தி உற்பத்தியிலும் மின் வழங்குகையிலும் தனி நபர்களின் ஈடுபாட்டின் அளவு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இந்த ஆணையத்தால் தீர்மானிக்கலாகும் ஒரு கால அளவுக்கு அத்தகைய பரிமாற்றக் கட்டணங்களில் உள்ளபடி செலுத்துகையை (actual payment) இந்த ஆணையம் தள்ளி வைக்கலாம்.

(6) <u>எதிர்விளைவு மின்சக்திக் கட்டணங்கள் (Reactive energy charges)</u>

(a) திறந்த நுழைவுரிமையின் காரணமாக நேரடி வாடிக்கையாளர்களுக்கான இந்த எதிர் விளைவு மின் சக்திக் கட்டணங்களின் செலுத்துகையானது இந்த ஆணையத்தால் அப்போதைக்கப்போது ஒப்பளிக்கப்படவேண்டிய கட்டணங்களுக்கு இணங்கியவாறு இருத்தல் வேண்டும். இத்தகையக் கட்டணங்கள் நிலவரத்திற்கேற்ப மாநில மின் கட்டமைப்பு விதித் தொகுப்பு / மின் பகிர்வு விதித்தொகுப்பு /மின் வழங்குகை விதித் தொகுப்பு ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர் விளைவு மின் சக்தி உற்பத்தி, மின் எடுப்பு ஆகியவற்றிற்காக இந்த நேரடி வாடிக்கையாளர் நிறைவேற்ற வேண்டிய தேவைப்பாடுகளின் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

(b) இந்த உரிமம்தாரரால் அல்லது இந்த மாநில மின் செலுத்துகைப் பயனகத்தால் (தற்போது தமிழ்நாடு மின்சார வாரியம்) பெறக்கூடிய அல்லது அவருக்கு செலுத்தக்கூடிய இந்த எதிர் விளைவு மின் சக்திக் கட்டணங்கள் இந்த உரிமம்தாரரால் அல்லது தொடர்புடைய இந்த மாநில மின் செலுத்துகைப் பயனகத்தால் இந்தச் சேர்மத்திலிருந்து (pool) பெறப்படுதல் அல்லது அதற்குச் செலுத்தப்படுதல் வேண்டும். மற்றும் இது பதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சுமத்தப்படுதல் கூடாது.

(c) இந்தப் பதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களால் எடுக்கப்படுகிற எதிர் விளைவு மின் சக்தி தொடர்புடைய மாநிலத்திற்குள் இயங்கலாகும் இந்த ஒழுங்குமுறை விதிகளால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

**(7) <u>மின் கட்டமைப்பு போதுமைக் கட்டணங்கள்(grid availability charges)</u>**

திறந்த நுழைவுரிமையில் ஒரு வாடிக்கையாளருக்கு மின் வழங்குகை செய்யும் மின் உற்பத்தியாளரின் மின் உற்பத்தி நிறுத்தி வைக்கும் நிகழ்வுகளை அல்லது இந்தப் பணித்திட்டமிடு மின் உற்பத்தியானது நடைபெறாது போகுமிடத்து அல்லது சொல்லப்பட்ட அந்த

வாடிக்கையாளரால் பணித்திட்டத்திற்கு மிகையாக மின் எடுத்து போகுமிடத்து தற்காலிக ஏற்பாடுகளை இந்த மின் பகிர்வு உரிமம்தாரரால் செய்யப்பட வேண்டும். இந்த நோக்கத்திற்காக மின் கட்டமைப்பிலிருந்து மின்சார வழங்குகை பெறுவதற்காக இந்த உரிமம்தாரர் மின் கட்டமைப்பு போதுமை கட்டணங்களை வசூலிப்பதற்கு உரிமையுடையவராவார். தற்சமயம், அந்த வாடிக்கையாளரின் வகைப்பாட்டுக்கு பொருந்துகிற மின் கட்டணங்கள் இந்த மின் கட்டமைப்புத் துணைபுரியும் கட்டணங்களாக இருப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். இந்த மாநிலத்தில் இந்த ABT முறை நிறைவேற்றப்படுகிற போதெல்லாம் மற்றும் இந்த ஆணையத்தால் UI கட்டணங்களை நிர்ணயிக்கப்படுகிறபோதெல்லாம், இந்த உரிமம்தாரருக்கு உரிமையுடையதான (a) இந்த குறிப்பிட்ட நுகர்வோர் வகைப்பாட்டிற்குப் பொருந்துகிற இந்த மின் கட்டணமோ அல்லது (b) இதற்கு பொருந்துகிற UI கட்டணங்களோ இவற்றுள் எது அதிகமாக உள்ளதோ அது இந்த மின் கட்டமைப்புத் துணைபுரியும் கட்டணமாக இருத்தல் வேண்டும்.

(b) மூன்றாமவரின் மின் சக்தி விற்பனையில் ஒரு மின் உற்பத்தியாளர் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ ஒரு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளராக இருந்து அவர் இந்த மின் கட்டமைப்பிலிருந்து மின் சக்தியை தொடக்கத்திலிருந்து எடுத்துப் பயன்படுத்த விரும்பினால், இந்த மின் உற்பத்தியாளர் அவ்வாறு செய்வதற்கு இந்த ஆணையத்தினால் தொடக்கத்திலிருந்து மின் சக்தி எடுப்பதற்கான தீர்மானிக்கப்பட வேண்டிய ஒரு கட்டணத்திற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், இந்த திறந்த நுழைவுரிமை பயன்படுத்துகிற மின் உற்பத்தியாளர் ஒரு சொந்த உபயோக மின் சக்தி உற்பத்தியாளராக/ NCES மின் உற்பத்தியாளராக / சுயேச்சை மின் சக்தி

உற்பத்தியாளராக (IPP) இருந்து மற்றும் அவர் இந்த மின் கட்டமைப்பிலிருந்து மின் சக்தியை தொடக்கத்திலிருந்து எடுத்துப் பயன்படுத்த விரும்பினால் இந்த நடவடிக்கையானது இந்த ஆணையத்தின் முறையே CPP / NCES கொள்கையினாலோ அல்லது இந்த ஆணையத்தினால் ஒப்பளிக்கப்பட்ட IPP நிகழ்வில் இந்த மின் சக்தி வாங்குகை ஒப்பந்தத்தின்படியாகவோ நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

**(8) <u>மின் மீட்டுத்தரல் (Restoration) கட்டணங்கள்</u>**

இந்த ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் (1) லிருந்து (7) வரையிலான இந்த துணை ஒழுங்குமுறை விதிகளின்படி குறிப்பிடப்பட்ட பல்வேறு கட்டணங்களைச் செலுத்துகையில் தவறுகை எதுவும் இந்த வாடிக்கையாளருக்கான இந்த நுழைவுரிமையானது தானாகவே அற்று போதலில் முடியும் விளைவினையுடையதாகும். அத்தகைய அற்றுப்போதலை மீட்டுத் தரலானது, இந்த ஆணையத்தினால் தனிப்பட்டவாறும் மற்றும் அப்போதைக்கப்போது தீர்மானிக்கப்பட வேண்டிய மின் மீட்டுத்தரல் கட்டணங்கள் செலுத்துகை மற்றும் மற்றைய மின் மீட்டுத்தரல் நிபந்தனைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**10. <u>ஒருங்கிணைப்பு முகவர் மையம் (Nodal Agency)</u>**

(i) மாநிலத்திற்குள் நீண்டகால மின் செலுத்துகை / மின் பகிர்வு நுழைவுரிமை ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையமானது இந்த மாநில மின் செலுத்துகைப் பயனகமாக இருத்தல் வேண்டும்.

(ii) மாநிலத்திற்குள் குறுகிய கால மின் செலுத்துகை / மின் பகிர்வு நுழைவுரிமை ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையமானது இந்த மாநில மின்சுமை அனுப்புகை மையமாக இருத்தல் வேண்டும்.

<u>குறிப்பு</u> (i) மாநிலங்களுக்கிடையேயான நீண்ட கால மின் செலுத்துகை / மின் பகிர்வு நுழைவுரிமை ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளை செய்வதற்கான இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையமானது இந்த மைய மின் செலுத்துகைப்பயனகம் (CTU) / இந்த மின் சக்தி எடுப்புப் பகுதி எந்த மின் செலுத்துகை உரிமம்தாரரின் திட்டத்தின் கீழ் உள்ளதோ அந்த மின் செலுத்துகை உரிமம்தாரர் ஆகியோர் இருத்தல் வேண்டும்.

(ii) மாநிலங்களுக்கிடையேயான குறுகிய கால மின் செலுத்துகை / மின்பகிர்வு நுழைவுரிமை ஆகியவற்றிற்கான இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையமானது இந்த மின் சக்தி எடுப்புப் பகுதி எந்த வட்டார மின் சுமை அனுப்புகை மையத்தின் (RLDC) கீழ் உள்ளதோ அந்த வட்டார மின் சுமை அனுப்புகை மையம் இருத்தல் வேண்டும்.

**11. <u>திறந்த நுழைவுரிமையின் பல்வேறு கட்டங்கள் (Phasing of open access)</u>**

இந்தச் சட்டத்திலும் மற்றும் இந்த ஒழுங்குமுறை விதிகளிலும் அடங்கியுள்ள இந்த நிபந்தனைகளை திருப்திபடுத்துதலுக்கு உட்பட்டு இந்த மாநிலத்திற்குள் மின் செலுத்துகை திட்டத்திற்கு இந்த திறந்த நுழைவுரிமையை அனுமதிக்கப்படுதல் வேண்டும். செயற்பாட்டு நிர்ப்பந்தங்கள் மற்றும் மற்றைய தொடர்புடைய அம்சங்கள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, திறந்த நுழைவுரிமையானது வாடிக்கையாளர்களுக்கு கீழே சொல்லப்பட்டவாறு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(a) முதற்கட்டத்தில், ஒழுங்குமுறை விதிகளின் தொடக்கத் தேதியிலிருந்து ஆறுமாதங்களுக்கு முன்பு, 10 மெகாவாட்டும் மற்றும் அதற்கு மேல் ஒரு மின்

சுமையை உடைய தற்போதுள்ள எல்லா HT நுகர்வோர் மற்றும் புதிய நுகர்வோர்கள் ஆகியோருக்கு திறந்த நுழைவுரிமை அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(b) இரண்டாவது கட்டத்தில், இந்த ஒழுங்குமுறை விதிகளின் தொடக்கத்திலிருந்து ஆறுமாதங்களுக்குப் பின் ஆனால் பதினெட்டு மாதங்களுக்கு முன்பு 5 மெகாவாட் மின் சுமையுடைய தற்போதுள்ள எல்லா HT நுகர்வோர்கள் மற்றும் புது விண்ணப்பதாரர்கள் ஆகியோருக்கு திறந்த நுழைவுரிமை அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(c) மூன்றாவதாகவும் மற்றும் கடைசிக் கட்டத்தில், 1 மெகாவாட் மற்றும் அதற்கு மேல் ஒரு மின் சுமையுடைய தற்போதுள்ள எல்லா HT நுகர்வோர்கள் மற்றும் புது விண்ணப்பதாரர்கள் ஆகியோருக்கு திறந்த நுழைவுரிமை அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(d) மின் பகிர்வு உரிமம்தாரர் / மின் வணிக உரிமம்தாரர் ஆகியோரைப் பொறுத்தும், மேற்கண்ட இந்த கட்டமைப்பு பொருந்துதல் வேண்டும்.

(e) மரபுசாரா எரி சக்தி மூலமாக மின் உற்பத்தி அல்லது தன் சொந்த உபயோகத்திற்காக மின் உற்பத்தி தொடர்பாக ஒரு கொள்கையால் உட்படுத்தப்பட்ட ஒரு நபர் ஒப்பந்த கோரிக்கை எப்படியிருந்தாலும் அவர்களது சொந்த உபயோகத்திற்காக திறந்த நுழைவுரிமையைப் பயன்படுத்துவதற்கு உரிமையுடையவர் ஆவார்கள்.

(f) மரபுசாரா எரி சக்தி மூலமாக மின்உற்பத்தி அல்லது தன் சொந்த உபயோகத்திற்காக மின் உற்பத்தி தொடர்பான ஒரு கொள்கையால் உட்படுத்தப்பட்ட ஒரு நபர்

மூன்றாமவர் விற்பனை பொறுத்து மேற்கண்ட திறந்த நுழைவுரிமை கட்டமைப்புக்கு உட்பட்டு திறந்த நுழைவுரிமையைப் பயன்படுத்துவதற்கு உரிமையுடையவர் ஆவார்.

12. <u>நீண்டகால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளருக்கான நடைமுறை</u>

(a) மாநில மின் செலுத்துகை பயனகத்திற்கு ஒரு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரால் நீண்டகால திறந்த நுழைவுரிமைக்கான விண்ணப்பமானது இந்த உடன்படிக்கை, மின் வழங்குகையினரிடமிருந்து பொறுப்பேற்றக் கடிதம், இறுதிப்பயனாளி பற்றிய விவரங்கள் (terminal beneficiary) முதலிவற்றோடு பணிந்து அனுப்பப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பம் தேவையான திறன் அளவு, மின் உட்செலுத்துப்பகுதி, மின் எடுப்புப் பகுதி, திறந்த நுழைவுரிமைப் பயன்படுத்துக்காலம், உச்சக்கட்ட மின் சுமை, தாங்கிய மின் சுமை (sustained load) மற்றும் STU வால் குறிப்பிடலாகும் கூடுதல் தகவல் ஆகிய விவரங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். இந்த இறுதிப்பயனாளி இந்த மாநிலத்தின் ஒரு மின் பகிர்வு உரிமம்தாரரின் ஒரு நுகர்வோராக இருப்பாரானால், இந்த ஒழுங்குமுறை விதிகளில் கூறப்பட்ட பல்வகைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியது தொடர்பான இந்த ஒழுங்குமுறை விதிகளின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றைக் கடைப்பிடித்து வருதலுக்கான ஒரு உறுதிமொழியை அத்தகைய நுகர்வோரிடமிருந்து பெற்று இந்த விண்ணப்பத்தோடு இணைத்து அனுப்ப வேண்டும். திறந்த நுழைவுரிமையைப் பயன்படுத்த விரும்பும் ஒரு நுகர்வோர், இந்த திறந்த நுழைவுரிமை நடவடிக்கைத் தொடர்புடைய இந்த மாநிலத்தின் மின் பகிர்வு உரிமதாரருக்கும் அவரது விண்ணப்பத்தின் படி ஒன்றை பணிந்தனுப்புதல் வேண்டும் :

ஆனால் இந்த ஒழுங்குமுறை விதிகளின் தொடக்கத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஒருங்கிணைப்பு முகவர் மையம் தேவையான வழிகாட்டு நெறிகள் (guidelines), நடைமுறை (Procedure) மற்றும் விண்ணப்ப படிவங்கள் ஆகியவற்றை வெளியிட வேண்டும்.

(b) இந்த விண்ணப்பம் இந்த STU வால் தீர்மானிக்கப்பட வேண்டிய முறையில் செலுத்தப்பட வேண்டிய ஒரு திரும்பக் கொடுக்கப்படாத விண்ணப்பப் பதிவுக் கட்டணத்தொகையான ரூபாய் ஐயாயிரத்தோடு சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

(c) தொடர்புடைய மற்றைய மின் செலுத்துகை மற்றும் மின் பகிர்வு உரிமம்தாரர்கள் உள்ளடங்கலான மற்றைய முகவர் மையங்களுடன் கலந்தாலோசித்து நடத்தப்பட்ட திட்ட அமைப்பு ஆய்வுகள் அடிப்படையில் இந்த விண்ணப்பம் பெற்றுக் கொண்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள், இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையம் இந்த திட்ட அமைப்பினை மேற்கொண்டு வலுப்படுத்துதலின்றி, இந்த நீண்டகால திறந்த நுழைவுரிமையை அனுமதிக்கலாமா அல்லது முடியாதா என்பதை இந்த விண்ணப்பதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

(d) ஆனால் இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டும் மேற்கொண்டு வலுப்படுத்துதலின்றியும் இந்த நீண்டகால திறந்த நுழைவுரிமை அனுமதிக்கப்படலாம் என்று இருக்கிறபோது பின் அத்தகைய நீண்டகால திறந்த நுழைவுரிமை வணிக உடன்படிக்கைச் செய்த பிறகு உடனடியாக அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(e) இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையத்தின் கருத்தில், இந்த நீண்டகால திறந்த நுழைவுரிமை வழங்குவதற்கு முன் மேற்கொண்டு திட்டமைப்பு வலுப்படுத்துதல் இன்றியமையாதது என்று இருக்குமானால் செலவு மதிப்பீடு மற்றும் திட்டமைப்பு வலுப்படுத்துதலுக்கான பணிமுடிப்புத் திட்டம் ஆகிய நோக்கத்திற்காக திட்ட ஆய்வு மற்றும் முதனிலை புலனாய்வு ஆகியவை நடத்துவதற்காக இந்த விண்ணப்பதாரர் இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையத்தை வேண்டிக் கொள்ளலாம் இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையம் இந்த விண்ணப்பதாரரிடமிருந்து வேண்டுகோள் பெற்றபிறகு உடனடியாக இந்த ஆய்வினை நடத்தி முடித்தும் மற்றும் இந்த வேண்டுகோள் விண்ணப்பதாரரிடமிருந்து பெற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள் இந்த ஆய்வு பற்றிய முடிவினைத் தெரிவிக்கவும் வேண்டும். திட்டமைப்பு வலுப்படுத்தலுக்கான ஆய்வுகளுக்கான செலவழித்த உள்ளபடியான செலவுத்தொகையை இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையத்திற்கு இந்த விண்ணப்பதாரர் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

(f) இந்த சாத்தியக் கூறு (feasibility) உறுதிப்படுத்தப்பட்ட பிறகும் மற்றும் உடன்படிக்கை எழுதிக்கொடுப்பதற்கு முன்னரும் இந்த திறந்த நுழைவுரிமை உடன்படிக்கைக் கட்டணத்தொகைக்காக ரூ.50,000/– தொகையை இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(g) உடன்படிக்கைகள் செய்யப்பட்டு அதன் படிகள் இந்த மாநில மின் சுமை அனுப்புகை மையத்திற்கு அனுப்பப்பட்ட பிறகு, இந்த மாநில மின் சுமை அனுப்புகை மையம் இந்த விண்ணப்பதாரருக்கு இந்த திறந்த நுழைவுரிமை

எந்தத் தேதியிலிருந்து பயன்படுத்தலாம் என்பதைத் தெரிவிக்க வேண்டும். இந்தத் தகவலை தெரிவித்தல் ஆனது இந்த உடன்படிக்கைகள் செய்யலாகும் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்கு மிகைபடாதவாறு இருத்தல் வேண்டும்.

(h) ஒரு நீண்டகால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் இந்த திறந்த நுழைவுரிமை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட அவரது உரிமைகளையும் மற்றும் கடப்பாடுகளையும் இந்த ஆணையத்தின் முன் ஒப்பளிப்பு இல்லாமல் துறந்துவிடவோ (relinquish) அல்லது மாற்றம் செய்யவோ கூடாது. இந்த உரிமைகள் மற்றும் கடப்பாடுகளைத் துறத்தல் அல்லது மாற்றம் செய்தல் ஆகியவை இந்த ஆணையத்தினால் தீர்மானிக்கலாகும் இழப்பீடு செலுத்துவதற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

**13. <u>குறுகிய கால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளருக்கான நடைமுறை</u>**

(a) இந்த மாநில மின் சுமை அனுப்புகை மையத்திற்கு ஒரு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரால், குறுகியகால திறந்த நுழைவுரிமைக்கான விண்ணப்பமானது இந்த உடன்படிக்கை, மின் வழங்குகையாளரிடமிருந்து பொறுப்பேற்றல் கடிதம், இறுதிப் பயனாளி பற்றிய விவரங்கள் முதலியவற்றோடு பணிந்து அனுப்பப்படல் வேண்டும். இந்த விண்ணப்பம், தேவையான திறன் அளவு, மின் உட்செலுத்துப் பகுதி, மின் எடுப்புப் பகுதி, திறந்த நுழைவுரிமைப் பயன்படுத்துகாலம், உச்ச கட்ட மின் சுமை, தாங்கிய மின் சுமை, மற்றும் மாநில மின் சுமை அனுப்புகை மையத்தால் குறிப்பிடலாகும் கூடுதல் தகவல் ஆகிய விவரங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். திறந்த நுழைவுரிமையைப் பயன்படுத்த விரும்பும் ஒரு வாடிக்கையாளர் அவரது விண்ணப்பத்தின் படி ஒன்றை எந்தப் பகுதியில் இந்த நேரடி /

பதிக்கப்பட்ட வாடிக்கையாளர் இருக்கிறாரோ அந்தப்பகுதியின் இந்த மின் பகிர்வு உரிமம்தாரருக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(b) இந்த விண்ணப்பம் மாநில மின் அனுப்புகை மையம் (SLDC) தீர்மானிக்கப்பட வேண்டிய முறையில் செலுத்தப்பட வேண்டிய ஒரு திரும்பக் கொடுக்கப்படாத விண்ணப்ப பதிவுக் கட்டணத்தொகையான ரூ.1000/– த்தோடு (ரூபாய் ஆயிரம்) சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

(c) மாநில மின் அனுப்புகை மையம் இந்த குறுகிய கால திறந்த நுழைவுரிமைக்கான சாத்தியக் கூறினை இந்த விண்ணப்பம் பெற்ற தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் இந்த விண்ணப்பதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

(d) இந்தச் சாத்தியக் கூறு உறுதிப்படுத்தப்பட்ட பிறகும் மற்றும் உடன்படிக்கை எழுதிக் கொடுப்பதற்கு முன்னரும், இந்த மா.மி.அ.மை (SLDC) யத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டிய முறையிலும் மற்றும் பெயரிலும் இந்தத் திறந்த நுழைவுரிமை உடன்படிக்கைக் கட்டணத் தொகையாக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) இந்த மா.மி.அ. மை. க்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(e) குறுகிய கால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் ஒருவரது ஒதுக்கீட்டு திறன் அளவானது பிறருக்கு மாற்றம் செய்யத்தக்கதல்ல.

(f) ஒதுக்கீட்டுத் திறன் அளவினை அதன் முழுமையாகவோ அல்லது அதன் கணிசமான பகுதியினையோ ஒரு குறுகிய கால வாடிக்கையாளர் பயன்படுத்த இயலாத நிகழ்வில், அவர் இந்த ஒதுக்கீட்டுத் திறன் அளவினை அவரது பயன்படுத்துகிற இயலாமைக்கான காரணங்களோடு மாநில மின் சுமை அனுப்பு

மையத்திற்கு தெரிவிக்க வேண்டும். மற்றும் ஒதுக்கீட்டு திறன் அளவினை கைவிடல் (surrender) வேண்டும்.

(g) மாநில மின் சுமை அனுப்புகை மையம் குறுகிய கால வாடிக்கையாளர் ஒருவரது ஒதுக்கீட்டுத் திறன் அளவினை அத்தகைய குறுகிய கால வாடிக்கையாளர் அடிக்கடி ஒதுக்கீட்டுத் திறன் அளவினை தேவைக்குக் குறைவாக பயன்படுத்துகிறபோது, குறைக்கவோ அல்லது ரத்து செய்யவோ செய்யலாம்.

(h) எந்த குறுகிய கால வாடிக்கையாளரின் ஒதுக்கீட்டுத் திறன் அளவினை கைவிடல் செய்யப்படுகிறதோ அல்லது எந்த குறுகியகால வாடிக்கையாளரின் ஒதுக்கீட்டுத் திறன் குறைக்கப்படுகிறதோ அல்லது ரத்துச் செய்யப்படுகிறதோ அந்த குறுகியகால வாடிக்கையாளர், முழுமையான மின் செலுத்துகை அல்லது நிலவரத்திற்கேற்ப, மின் வழங்குகைக் கட்டணங்கள் மற்றும் மூல ஒதுக்கீட்டுத் திறன் அடிப்படையில் உள்ள இந்த பணித்திட்டம் மற்றும் திட்டச் செயற்பாடு கட்டணங்கள் முழுமையும், இந்தப் பயனகத்தால் அது பயன்படுத்தப்படாத காலம்வரை அல்லது மற்றைய திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் எவருக்கோ அது ஒதுக்கப்பட்டு மற்றும் இந்தத் திறன் அளவு எந்த காலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அந்தக் காலத்திற்கு உட்பட்டு, உள்ள ஒரு காலம்வரை, ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(i) இந்த ஒதுக்கீட்டுத் திறன் அளவை கைவிடுதல் விளைவாக அல்லது மாநில மின் சுமை அனுப்புகை மையத்தினால் குறைக்கப்படுதல் அல்லது ரத்துச் செய்யப்படுதல் ஆகியவற்றின் விளைவாக எஞ்சியிருந்து கிடைக்கக் கூடிய

திறன் அளவை ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்கியவாறு மற்றைய குறுகியகால வாடிக்கையாளர் எவருக்கும் ஒதுக்கப்படலாம்.

(j) பதிவு / உடன்படிக்கைக் கட்டணம் ஆகியவற்றின் நோக்கத்திற்காக, குறுகியகால திறந்த நுழைவுரிமை உடன்படிக்கைகளில் புதுப்பித்தலானது ஒரு புது விண்ணப்பதாரரை எவ்விதம் கையாளப்படுமோ அவ்விதமாக கையாளப்பட வேண்டும்.

**14. <u>முன்னுரிமை மட்டுப்படுத்துதல்</u>**

நிர்ப்பந்தங்கள் அல்லது மற்றவைகள் ஆகிய காரணங்கொண்டு இந்த வாடிக்கையாளர்களின் இந்த திறந்த நுழைவுரிமைப் பணிகளை மட்டுப்படுத்துதல் அவசியமாகிறது என்றிருக்கும் போது, மின் கட்டமைப்பு விதித்தொகுப்பின் தேவைப்பாடுகளுக்குட்பட்டு, முதலில் இந்த மாநிலத்திற்குள் குறுகிய கால நுழைவுரிமை வாடிக்கையாளர்களை மட்டுப்படுத்த வேண்டும், இதைத் தொடர்ந்து இந்த மாநிலத்திற்குள் நீண்ட கால வாடிக்கையாளர்களை மட்டுப்படுத்த வேண்டும். ஒரு மின் பகிர்வு உரிமம்தாரரின் இந்த திறந்த நுழைவுரிமையை கடைசியாக மட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும். மா.மி.அ.மை (SLDC) மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களின் மட்டுப்படுத்துதலுக்காக வழிகாட்டு நெறிகளை இயற்றுதல் வேண்டும்.

**15. <u>மின் அளவிடுதல் (Metering)</u>**

**(1)** மின் அளவிகளை நிறுவுதலும் மற்றும் செயற்படுத்தலும் குறித்தான மைய மின்சார அதிகார ஆயத்தின் ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்கியவாறும் மற்றும் மின் வழங்குகைக் காலம் மற்றும் மின் கட்டண வகைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையிலும் இந்த

திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் மின் அளவிடுதலுக்கான ஏற்பாடுகளைச் செய்திடல் வேண்டும்.

(2) ஒரு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளருக்கு மின் வழங்குகை செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ள இந்த மின் உற்பத்தி கம்பெனி அல்லது ஒரு உரிமம்தாரர் திறந்த நுழைவுரிமையின்படி இந்த வாடிக்கையாளர்களுக்கு மின் வழங்கல் செய்திடல் அடிப்படையில் பல்வேறு முனைகள் கூடும் பகுதியில் (Inter connection points) பிரதான அளவிகளை (main meters) அமைக்க வேண்டும் அல்லது மாநிலங்களுக்கிடையேயான மின் செலுத்துகை நிகழ்வில், மாநில மின் சுமை அனுப்புகை மையத்தினால், உள்ளபடியான நேர அடிப்படையிலும் காலமுறை தோறும், குறிப்பிடலாகும் படிவத்தில் இடமாற்றல் (Displacement) / சரிகட்டுதல் (Adjustment) ஆகியவை செய்துள்ள தொடர்புடைய வட்டார மின் சுமை அனுப்புகை மையங்களின் மின் சக்தி கணக்குகளை அனுப்புதலுக்கான ஏற்பாட்டினை அது செய்திடல் வேண்டும்.

(3) பிரதான மின் அளவிகளின் அதே அமைப்பைப் போன்றவாறான சரிபார்ப்பு மின் அளவிகளையும் (check meters) இந்த மின் பகிர்வு உரிமம்தாரர் ஏற்படுத்த வேண்டும்.

(4) தொடர்புடைய மற்றைய நபர் முன்னிலையில் இந்தப் பிரதான மின் அளவி மற்றும் சரிபார்ப்பு மின் அளவி ஆகியவற்றை மாநில மின் செலுத்துகைப் பயனகம் காலமுறைகளில் சரிபார்த்தலையும் மற்றும் அளவு கணிக்கப்படுதலையும் (calibration) செய்திடல் வேண்டும். இருதரப்பினர்களும் பிரதான மற்றும் சரிபார்ப்பு மின் அளவிகளை பாதுகாப்பு முத்திரையிடுதல் (seal) வேண்டும். குறைபாடுள்ள அளவிகளை உடனடியாக பதிலீடு மாற்ற (replace) வேண்டும். இதன்பொருட்டு மைய மின்சார அதிகார ஆயத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள

ஒழுங்குமுறை விதிகளினால் இந்தச் சோதனையிடல் (testing) சரிபார்த்தல் (checking) மற்றும் அளவு கணித்தல் (calibration) முதலியவைகளின் காலமுறை (periodicity) நிர்வகிக்கப்படும்.

(5) மின் பகிர்வு உரிமம்தாரர் மற்றும் வாடிக்கையாளர்கள் அல்லது அவரது பிரதிநிதி, (அவர் இருந்தால்) ஆகியோரின் அதிகாரம் பெற்ற அலுவலரால் (Authorised officer) குறித்த நாள் மற்றும் நேரத்தில் காலமுறை தோறும் இந்தப் பிரதான மற்றும் சரிபார்ப்பு மின் அளவிகளை பார்வையிடுதலை (reading) எடுத்திடல் வேண்டும். மின் அளவினைப் பார்வையிடுதலை, நிலவரத்திற்கேற்ப, மாநில மின் சுமை அனுப்புகை மையம், வாடிக்கையாளர், மாநில மின் செலுத்துகை மற்றும் மின் உற்பத்தி கம்பெனி / மின் வணிகர் ஆகியோருக்கு உடனடியாக இந்த மின் பகிர்வு உரிமம்தாரரால் பன்னிரண்டு மணி நேரத்திற்குள் தெரிவிக்கப்படுதல் வேண்டும். பிரதான மின் அளவிகள் குறைபாடுடையதாக அல்லது நின்றுவிட்டதாகக் காணப்படுகிறபோது சரிபார்ப்பு மின் அளவிகளைப் பார்வையிடுதலை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் :

இருந்தாலும் பிரதான மற்றும் சரிபார்ப்பு மின் அளவிகள் ஆகியவை பார்வையிடப்படுதலுக்கும் அதற்கு நேருக்கு நேர் (vis-à-vis) உள்ள பிரதான மின் அளவியின் பார்வையிடுதலுக்கும் உள்ள வேறுபாடு பொருத்தமான இனத்திற்குப் பொருந்துகிற பிழைப்பாட்டின் விழுக்காடு இரண்டு மடங்கினைத்தாண்டி இருக்குமானால் இவ்விரண்டு மின் அளவிகளும் சோதனையிடப் படல் வேண்டும். மற்றும் குறைபாடுடைய ஒன்றினை உடனடியாக பதிலீடு மாற்றம் செய்யப்படல் வேண்டும். மற்றும் மற்றையதன் பார்வையிடுதலை உடனடியாக எடுத்துக்கொள்ளுதல் வேண்டும் :

மேலும், இந்தப் பிரதான நோக்கத்திற்காக, மின் பகிர்வு உரிமம்தாரர், எந்த உரிமம்தாரரின் செயற்பாட்டிலும் மற்றும் பராமரிப்பிலும் உள்ள மின் பகிர்வு திட்டத்தில்

நுகர்வோரின் விவரங்கள் இணைக்கப்படுகின்றனவோ அந்த மின் பகிர்வு உரிமம்தாரராக இருத்தல் வேண்டும்.

(6) திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் அல்லது மின் உற்பத்தி நிறுமம் அல்லது உரிமம்தாரர் ஆகியோர் மின் பகிர்வு உரிமம்தாரரை பிரதான மின் அளவியை அமைக்குமாறு வேண்டிக்கொள்ளலாம். அத்தகைய நிகழ்வில், அவர் மின் பகிர்வு உரிமம்தாரருக்கு பிணையம் அளிக்க வேண்டும் மற்றும் அதனது வாடகையையும் செலுத்த வேண்டும். மற்றும் பிரதான மின் அளவி மின் பகிர்வு உரிமம்தாரரால் பராமரிக்கப்பட்டு வருதல் வேண்டும்.

(7) ஆணையத்தினால் குறிப்பிடலாகும் உள்ளபடியான நேர அடிப்படையிலோ அல்லது மற்றையதன் அடிப்படையிலோ பிரதான மற்றும் சரிபார்ப்பு மின் அளவிகள் அதன் பார்வையிடுதலை மாநில மின் சுமை அனுப்புகை மையத்திற்கு தெரிவிப்பதற்கான வசதிமுறையை உடையதாக இருத்தல் வேண்டும். அத்தகைய சிறப்பு மின் சக்தி மின் அளவிகள் (இதன் பொருட்டு மைய மின்சார அதிகார ஆயத்தினால் குறிப்பிடலாகும் தேவைப்பாடுகளுக்கு இணங்கிய வண்ணம்) இந்த மா.மி.ப. க்கு (STU) இந்த நேரடி வாடிக்கையாளர்களில் நிறுவப்படுதல் வேண்டும். மற்றும் அவ்வாறு கோரப்படுமானால், இந்த மா.மி.ப. (STU) / மா.மி.அ.மை (SLDC) (ஒருங்கிணைப்பு முகவர் மையம்) ஆகியோரால் தேவையானது என்று கருதப்பட்டால் இந்த பதிக்கப்பட்ட வாடிக்கையாளராலும் கூட நிறுவப்படுதல் வேண்டும்.

(8) நிறுவப்பட்ட இந்தச் சிறப்பு மின் சக்தி மின் அளவிகள் இந்த மாநில மின் செலுத்துகை பயனகத்தினால் அல்லது இந்த மாநில மின் சுமை அனுப்புகை மையத்தினால் குறிப்பிடப்பட்டவாறு தீவிர மின் சக்தியின் நேரம் – வித்தியாசம் பொருந்திய அளவுகள் (active energy) (பதினைந்து நிமிடங்கள் முழுமையாக) மற்றும் எதிர் தீவிர மின் சக்தி (reactive

energy) யின் மின்னழுத்தம்– வித்தியாசம் பொருந்திய அளவுகள் ஆகியவற்றை எடுக்கக்கூடிய திறமை வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்.

(9) ‘மின் அளவி’ எனும் சொல் நடப்பு மின் திறன் மாற்றிகள் (current transformers) மின்னழுத்தம் / சக்தி வாய்ந்த மின் திறன் மாற்றிகள் அவைகளுக்கிடையேயும் மற்றும் மின் அளவிப் பெட்டி / பலகை அமைப்பு (meter box / panel) ஆகியவற்றை இணைக்கிற மின் கம்பி (wiring) ஆகியவற்றை உள்ளடக்கும்.

16. <u>மின் சக்தி இழப்புகள்</u>

இந்த மாநில மின் சுமை அனுப்புகை மையத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட இந்த மின் செலுத்துகைத் திட்டத்தில் உள்ள சராசரி மின் சக்தி இழப்புகளை இந்தத் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். இந்த மின் செலுத்துகைத் திட்டத்தில் உள்ள மின் சக்தி இழப்புகளை, மின் உட் செலுத்துகைப் பகுதியில் கூடுதல் மின் உட்செலுத்துகை செய்து சரிசெய்துகொள்ளுதல் வேண்டும். இந்த மாநில மின் சுமை அனுப்புகைப் பிரிவின் இணையத்தளத்தில் முந்திய ஐம்பத்திரண்டு வாரங்களுக்கான சராசரி மின் சக்தி இழப்புகள் குறித்தான தகவலைப் பதிவு செய்ய வேண்டும். எல்லா திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களின் இந்தத் திட்டத்திலுள்ள சராசரி மின் சக்தி இழப்பை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை இந்த மா.மி.அ.மை. னால் (SLDC) கண்காணிக்கப்படுதல் அவசியமாகும். மின் வழங்குகையின் திறந்த நுழைவுரிமை நிகழ்வில், இந்த உரிமம்தாரர் உ.மி. (HT) திட்டத்தில் (11 KV வரை) உள்ள இழப்புகளை மதிப்பீடு செய்திடல் வேண்டும். இந்த ஆணையத்தால் ஒப்பளிக்கப்பட்ட இந்த இழப்புகளை இந்த திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரால் ஏற்றுக்கொள்ள வேண்டும். முன்னேற்ற முறையாக (progressively) இந்த இழப்புகள் விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி கணிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவை

இந்த மின் கட்டண அறிவிக்கையில் இந்த ஆணையத்தால் ஒப்பளிப்பு செய்யப்பட்டபிறகு திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**17. மின் கட்டமைப்பு விதித்தொகுப்பினைப் பின்பற்றுதல்**

இந்த திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் இந்திய மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு, தமிழ்நாடு மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு மற்றும் அப்போதைக்கப்போது பொருந்தலாகும் மாநில மின் செலுத்துகைப் பயனகம் மற்றும் மாநில மின் சுமை அனுப்புகை மையம் ஆகியவைகளால் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றைக் கடைப்பிடித்தொழுகி இருத்தல் வேண்டும்.

**18. பிணையம் (Security) செலுத்துகை**

(a) மின் செலுத்துகைக் கட்டணங்களுக்கு பிணையம் செலுத்துகையாக, இந்த உடன்பாடு செய்யப்பட்ட ஒப்பந்தக் கோரிக்கை அடிப்படையில் அல்லது திட்டமிட்ட மின் எடுப்பு அடிப்படையில், மூன்று மாத பில் தொகையின் சராசரித் தொகைக்கு சரிசமமாக உள்ள ஒரு வைப்புத் தொகையை மாநில மின் செலுத்துகைப் பயனகத்திடம் வைத்து பராமரித்து வருதல் வேண்டும்.

(b) மா.மி.அ.மை. (SLDC) க் கட்டணங்களுக்காக பிணையம் செலுத்துகையாக, மூன்று மாத மா.மி.அ.மை க் கட்டணங்கள் தொகைக்கு சரிசமமான ஒரு வைப்புத் தொகையை இந்த மாநில மின் சுமை அனுப்புகை மையத்திடம் வைத்து பராமரித்து வருதல் வேண்டும்.

(c) மின்சாரம் எடுத்துச் செல்லுதலுக்கான கட்டணங்கள் (wheeling charges), மிகைக் கட்டணம் மற்றும் கூடுதல் மிகைக் கட்டணம் ஆகியவற்றிற்கு பிணையம் செலுத்துகையாக, இந்த கட்டணங்களின் மூன்று மாத சராசரி பில் தொகைக்கு சரிசமமான ஒரு

வைப்புத் தொகையை இந்த மின் வழங்குகைப் பகுதியின் இந்த மின் பகிர்வு உரிமம்தாரரிடம் வைத்து பராமரித்து வருதல் வேண்டும்.

(d) அத்தகைய பிணையமானது ரொக்கப் பணம் வைப்புத்தொகை வடிவத்திலோ அல்லது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் ஒரு வட்டாரக் கிளையிடமிருந்து பெற்ற ரத்து செய்ய முடியாத நாணயக் கடிதம் வடிவத்திலோ இருக்கலாம்.

**19. வசூலிப்பு மற்றும் பங்கீட்டுக் (disbursement) கட்டணங்கள்**

ஆணையத்தினால் வேறுவிதமாக அறிவிக்கைச் செய்யப்பட்டாலன்றி, ஒழுங்குமுறை விதிகள் 9 ல் குறிப்பிடப்பட்டபடி இந்த வசூலிப்பு மற்றும் பங்கீட்டுக் கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு நிர்வகிக்கப்படுதல் வேண்டும்:–

(a) இந்த விண்ணப்பப் பதிவு மற்றும் உடன்படிக்கைக் கட்டணத் தொகை தொடர்புடைய இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(b) இந்த மாநிலத்திற்குள் மின் செலுத்துகைக் கட்டணங்கள் மற்றும் திறந்த நுழைவுரிமைக்கான மின்சாரம் எடுத்துச் செல்லுதலுக்கான கட்டணங்கள் (wheeling charges) ஆகியவை இந்த திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரால் நேரடியாகவே தொடர்புடைய உரிமம்தாரர்களுக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(c) திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர் பொறுத்ததான இந்த பணித்திட்டமிடுதல் மற்றும் திட்டச் செயற்பாட்டுக் கட்டணங்கள் ஆகியவை இந்த மாநில மின் சுமை அனுப்புகை மையத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(d) இந்த மிகைக் கட்டணம் மற்றும் கூடுதல் மிகைக் கட்டணம் ஆகியவை இந்த திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரால் அவரது மின் வழங்குகை பகுதியின் மின் பகிர்வு உரிமம்தாரருக்கு நேரடியாகவே செலுத்தப்படுதல் வேண்டும்.

(e) இந்த மின் கட்டமைப்பு வலுப்படுத்துக் கட்டணங்கள் (grid support charge) திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளரால் நேரடியாகவே இந்தத் தொடர்புடைய மின் பகிர்வு உரிமம்தாரருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**20. <u>தகவல் திட்டம்</u>**

இந்த மாநில மின் சுமை அனுப்புகை மையம் தனது இணையதளத்தில் ‘‘திறந்த நுழைவுரிமைத் தகவல்’’ என்ற தலைப்புடைய ஒரு தனிப்பட்ட இணையதள பக்கத்தில் கீழ்க்கண்ட தகவலைப் பதிவு செய்தல் வேண்டும். மற்றும் அத்தகைய தகவல் அடங்கிய ஒரு மாதாந்திர மற்றும் வருடாந்திர அறிக்கையினையும் வெளியிட வேண்டும்.

(1) (a) வாடிக்கையாளரின் பெயர்

(b) திறந்த நுழைவுரிமையின் காலம் (தொடக்கத் தேதி மற்றும் முடிவுறு தேதி)

(c) மின் உட்செலுத்துப் பகுதி

(d) மின் எடுப்புப் பகுதி

(e) பயன்படுத்தப்பட்ட மின் செலுத்துகை திட்டம் / மின் பகிர்வு திட்டம் மற்றும்

(f) பயன்படுத்தப்பட்ட திறந்த நுழைவுரிமை ஆகியவற்றை குறிப்பிடுகிற நீண்ட கால திறந்த நுழைவுரிமையின் ஒரு நிலைமை அறிக்கை

(2) (a) வாடிக்கையாளரின் பெயர்

(b) வழங்கப்பட்ட திறந்த நுழைவுரிமை காலம் (தொடக்க தேதி மற்றும் முடிவுறு தேதி)

(c) மின் உட்செலுத்துகைப் பகுதி

(d) மின் எடுப்புப் பகுதி

(e) பயன்படுத்தப்பட்ட மின் செலுத்துகை திட்டம் / மின் பகிர்வு திட்டம் மற்றும்

(f) பயன் படுத்தப்பட்ட திறந்த நுழைவுரிமை ஆகியவற்றை குறிப்பிடுகிற நடப்பு குறுகிய கால வாடிக்கையாளர்கள் குறித்தான ஒரு நிலைமை அறிக்கை

(3) உச்சக்கட்ட சுமை பெருக்குகள் மற்றும் (மி.உ.அ) துணை மின் நிலையங்களிலிருந்து உருவாகும் எல்லா (மி.உ.அ) மின் கம்பிகள் மற்றும் (உ.அ) மின் கம்பிகள் ஆகியவற்றின் ஒதுக்கீட்டுத்திறன் அளவு உள்ளடங்கலான கிடைக்கத்தக்க திறன் அளவு.

(4) தொடர்புடைய உரிமம்தாரரால் தீர்மானிக்கப்படுகிற மின் செலுத்துகை மற்றும் மின் பகிர்வு திட்டத்திலுள்ள சராசரி இழப்பு குறித்தான தகவல்.

## 21. <u>தீர்வுகாண் முறை சாதனம்</u>

(1) திறந்த நுழைவுரிமை குறித்தான எல்லா வழக்குகள் மற்றும் குறையீடுகள் ஆகியவை தொடர்புடைய ஒருங்கிணைப்பு முகவர் மையத்திற்கு கொடுக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அந்தக் குறையினை முப்பது நாட்களுக்குள் புலன் விசாரணை மற்றும் தீர்மானிக்க முயலுதலும் செய்யலாம்.

(2) இந்த ஒருங்கிணைப்பு முகவர் மையம் அதாவது மா.மி.ப (STU) / மா.சு.அ.மை (SLDC) ஒரு குறையைத் தீர்மானிக்க இயலாதபோதெல்லாம், இந்த விஷயம் ஆணையத்திற்கு அனுப்பப்படலாம்.

## 22. <u>இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்</u>

இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகள் எதனையும் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், இந்த ஆணையம் பொதுவான அல்லது தனிப்பட்ட ஆணை மூலமாக, அந்த இடர்ப்பாட்டினைத் தவிர்க்கும் நோக்கத்திற்காக, இந்த ஆணையத்திற்கு தேவையானது அல்லது உகந்தது என்று தோன்றலாகும் நடவடிக்கையை எடுக்குமாறு இந்த மாநில மின் செலுத்துகைப் பயனகத்தையும் மாநில மின் சுமை அனுப்புகை மையத்தையும், உரிமம்தாரர்களையும் மற்றும் இந்தத் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களையும் பணிக்கலாம்.

**23. <u>கட்டாயச் சூழ்நிலை (Force majeure)</u>**

**(1)** இந்த ஒழுங்குமுறை விதிகளின் நோக்கங்களுக்காக திறந்த நுழைவுரிமை உடன்படிக்கை கொண்ட தரப்பினர் எவரின் வளாகங்கள், நிலையங்கள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றைப் பாதிக்கிற போர், பெருங்கலகம் (mutiny) உரிமைக் கொந்தளிப்பு, கலகம் (riot), வெள்ளம், புயல், மின்னல், பூகம்பம், அல்லது வேலை நிறுத்தம், கதவடைப்பு, நெருப்பு ஆகியவை போன்றவாறான நிகழ்வுகள் கட்டாயச் சூழ்நிலை நிகழ்ச்சியாக வகைப்படுத்தப்படுதல் வேண்டும்.

**(2)** ஒரு கட்டாயச் சூழ்நிலை நிகழ்வு ஏற்படுகிற நிலை காரணமாக அத்தகைய உடன்படிக்கையின்படியாகவோ அல்லது ஒழுங்குமுறை விதிகளின் படியாகவோ, உரிய காலத்திற்குள்ளும் மற்றும் அதில் கோரியப்படியும் கடப்பாடு எதனையும் ஒரு திறந்த நுழைவுரிமை உடன்படிக்கையின் தரப்பினராக இருந்து வருகிற நபர் எவரும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிறைவேற்ற முடியாமல் போனால், பின் இந்த ஒழுங்குமுறை விதிகளுக்குட்பட்டு, அத்தகைய கடப்பாடானது அத்தகைய கட்டாயச் சூழ்நிலை நிகழ்வினால்

பாதிக்கப்படுகிற நபரின் அத்தகைய கடப்பாட்டினை நிறைவேற்றும் திறமையினைப் பாதிக்கிற கால அளவு வரையில் நிறுத்திவைக்கப்படுகிறது.

## 24. திருத்துவதற்கான அதிகாரம்

இந்த ஆணையம், ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகள் எதனையும், எக்காலத்திலும், வேறுவகையில் செய்யவோ (vary), வேறாக்கம் செய்யவோ (alter) , மாற்றவோ (modify) அல்லது திருத்தவோ செய்யலாம்.

## 25. காப்பு

(1) இந்த ஒழுங்குமுறைகளில் அடங்கியுள்ள எதுவும் உரிமம்தாரர் எவரையும் அல்லது வாடிக்கையாளரை அல்லது மின் உற்பத்தியில் ஈடுபடும் ஒரு நபரை அல்லது ஒரு மின் பகிர்வு உரிமம்தாரரின் மின் வழங்குகைப் பகுதியில் தனது வளாகத்தையுடைய ஒரு நபரை, இந்த ஒழுங்குமுறை விதிகள் அறிவிக்கைக்கு முன்னரோ அல்லது பின்னரோ இருந்தாலும் சரி, திறந்த நுழைவுரிமையைப் பயன்படுத்துவதற்காக நிபந்தனைகள் எவற்றிடமிருந்தோ அல்லது எல்லாவற்றிலிமிருந்தோ விதிவிலக்களிக்கும் ஆணையத்தின் அதிகாரங்களை செல்லாததாக ஆக்க முடியாது.

ஆனால் இந்த ஆணையம், அத்தகைய விதிவிலக்கு அளிப்பதற்கு முன், நடைமுறைக்கு கூடுமான முறையில், அக்கறை கொண்ட நபர் அல்லது பாதிக்கப்பட்ட தரப்பினர் எவருக்கும் முறையீடுகள் செய்வதற்கு ஒரு நியாயமான வாய்ப்பினை அளிக்க வேண்டும்.

(2) இந்த ஒழுங்குமுறை விதிகளில் அடங்கியவை எதுவும், நீதியின் குறிக்கோளை எய்துவதற்கோ அல்லது ஆணையத்தின் நடைமுறையைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் பொருட்டோ தேவையான ஆணைகளைப் பிறப்பிப்பதற்கான ஆணையத்தின் உட்கிடை அதிகாரத்தை மட்டுப்படுத்தவோ அல்லது மற்றபடி பாதிக்கவோ ஆகாது எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) இந்த ஒழுங்குமுறை விதிகளில் அடங்கியவை எதுவும், சட்டத்தின்வகை முறைகளுக்கு இணங்கியவாறு இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு மாறுபட்ட வகையிலான ஒரு நடைமுறையை, ஒரு விஷயம் அல்லது விஷயத்தின் வகைகள் ஆகியவற்றின் தனிப்பட்டச் சூழ்நிலைகளின் காரணங்களைக் கொண்டும் மற்றும் எழுத்துருவில் பதிவுச் செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காகவும் அத்தகைய விஷயம் அல்லது விஷயத்தின் வகைகளை அவ்வாறு கையாளுவது தேவையானது அல்லது உகந்தது என ஆணையம் கருதுமானால், அத்தகைய மாறுபட்ட நடைமுறையைப் பின்பற்றுவதைத் தடுத்தலாகாது.

(4) இந்த ஒழுங்குமுறை விதிகளில் அடங்கியவை எதுவும், எந்த விஷயத்தைக் கையாளுதல் பற்றியோ அல்லது எந்த அதிகாரத்தையோ அல்லது கடமையையோ செலுத்துதல் பற்றியோ ஒழுங்குமுறை விதி எதுவும் செய்யப்படாமலுள்ளதோ அந்த விஷயத்தை ஆணையம் கையாளுவதற்கோ அல்லது அதிகாரத்தையோ அல்லது கடமையையோ செலுத்துவதற்கோ, வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ தடுத்தலாகாது. மற்றும் இந்த ஆணையம்

அத்தகைய விஷயங்களை, அதிகாரங்களை, மற்றும் கடமைகளை தனக்கு சரி என்று அது கருதுகிறபடி கையாளலாம்.

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**இரா.பாலசுப்பிரமணியன்,**
**செயலாளர்.**